RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சுண்ணப் பரவன் இனமக்களின் ஆடை, அணிகலன்கள்

கு. ரதி [அ], த. மகிலா ஜெனி [அ]

[அ] தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்-629802, இந்தியா

# A Cultural Study of the Clothing and Ornaments of the Chunnap Paravan Community

**K. Rathi [a], D. Mahila Jeni [a]**

[a] Department of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629802, India

*Corresponding Author:
mahlajenijebasingh@gmail.com

**ABSTRACT**

Economic life is one of the fundamental dimensions of human society, and economic conditions often determine the social status and standard of living of individuals and communities. In the course of daily life, people develop distinctive cultural practices that reflect their occupation, environment, and social identity. The Chunnap Paravan is an ethnic community whose name is derived from its traditional occupation. Like many other communities, the Chunnap Paravans possess a distinctive material culture expressed through their traditional clothing and ornaments.Tamil possesses a rich vocabulary related to clothing, including terms such as udai, thazhai, thugil, udukkai, sithar, madi, pattu, and mudai, many of which appear in Sangam literature. The men of the Chunnap Paravan community traditionally wore garments such as cotton cloth, kachchai (waistcloth), veshti (dhoti), shirts, shoulder cloths, angavastram, and mundasu (turban). Women commonly wore sarees, bridal sarees (koorai pudavai), silk skirts, blouses, and davani (half-saree). Ornaments constitute an important aspect of cultural identity and personal adornment. In Tamil, the word ani signifies beauty, and ornaments enhance not only personal appearance but also cultural expression. Men of the Chunnap Paravan community traditionally wore ornaments such as waist cords (araiñāṇ), ear studs, bangles, chains, protective amulets, and rings. Women's ornaments included a wide variety of traditional adornments, such as hair ornaments, makara kundalam (earrings), nose studs, necklaces, thali (marital pendant), bangles, anklets, toe rings, and numerous other decorative ornaments associated with Tamil cultural traditions. This article examines the traditional clothing and ornaments of the Chunnap Paravan community, highlighting their cultural significance and their role in preserving the community's material and social heritage.

**Keywords:** Chunnap Paravan, Ornaments, Cultural Traditions, traditional occupation, Paravan community

## முன்னுரை

மனித சமூகத்தின் வாழ்வியல் நிகழ்வுகளில் ஒன்று பொருளாதாரமாகும். சமூகத்தில் பொருளாதாரமே வாழ்வியலின் உயர்வு தாழ்வு நிலைகளை உருவாக்குகின்றன. மனிதனின் அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் விலங்கினப் போக்குகள் அதிகமாக வெளிப்படுகின்றன. உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றிற்கான தேடலில் விலங்கினப் போக்கில் இருந்து வேறுபட்டு அவன் தனது பகுத்தறிவைப் பயன்படுத்தி புதிய சமூகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளான். உலகில் மக்கள் வளமோடு வாழ்வதற்குப் பொருள் தேவைப்படுகிறது. அப்பொருட்களில் சுண்ணப் பரவன் இனமக்களின் ஆடை, அணிகலன்கள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

## சுண்ணப் பரவன் பெயர்க் காரணம்

சுண்ணப் பரவன் என்பது இனப்பெயராகும். சுண்ணப் பரவன் இனமக்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் இப்பெயர் எழுந்தது. சுண்ணப் பரவன் என்பவர்கள் "சுண்ணாம்பு நீற்றி விற்கும்"1 சாதியினர். "கடல் சிப்பியைச் சேகரித்து, சுட்டு, சுண்ணாம்பு செய்பவர்" 2 ஆவார். சுண்ணப் பரவன் இனமக்களைத் தொண்டைமான் என்றும் அழைக்கின்றனர்.

## ஆடை

ஆடை என்பது ஒருவனை அடையாளம் காட்டுவதற்குரிய ஒன்றாகும். தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள மாந்தரின் சிறப்பியல்புகளையும் உணர்த்தி நிற்பதில் முதன்மைப் பெறுவது ஆடையாகும். "ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் ஆள் பாதி, ஆடை பாதி என்ற தமிழர் மொழிகளும்" 3 இதன் காரணமாகத் தோன்றியது.

## ஆடை பற்றிய சொற்கள்

மனித வாழ்வில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற ஆடை தொடர்பாகத் தமிழில் பயன்படுத்தும் சொற்கள் பல. அவற்றுள் உடை, தழை, துகில், ஆடை, உடுக்கை, சித்தார், மடி, பட்டு, சிதர்வை, சிதவல், துகில், முடி போன்றவை சங்க காலத்தில் மக்கள் பயன்படுத்திய ஆடைகளின் பெயராகும்.

## சுண்ணப்பரவன் இனமக்களின் ஆடை

சுண்ணப்பரவன் இனமக்களில் ஆண்கள் பருத்தி, கச்சை, வேட்டி, சட்டை, துண்டு, அங்கவஸ்திரம், முண்டாசு தலைப்பாகை போன்ற ஆடையைப் பயன்படுத்தினர். பெண்கள் புடவை, கூறைப்புடவை, பட்டுப்புடவை, பட்டுப் பாவாடை, சட்டை, தாவணி போன்ற ஆடையினைப் பயன்படுத்தினர்.

## ஆண்கள் பயன்படுத்திய ஆடை

பருத்தி, கச்சை, வேட்டி, சட்டை, துண்டு, அங்கவஸ்திரம், முண்டாசு தலைப்பாகை போன்ற ஆடையை ஆண்கள் பயன்படுத்தினர்.

## பருத்தி

ஆண்கள் வீட்டில் இருக்கும் போது பருத்தியாலான ஆடையைப் பயன்படுத்தினர். உலகின் மிகப்பரந்த நிலையில் பயன்படுத்தப்படும் சிறப்பு பருத்தி ஆடைக்கு உண்டு. பருத்தி ஆடை மலர்களைப் போன்று மெல்லியதாயிருந்தன. முந்தைய காலம் முதல் தற்போது வரை சுண்ணப் பரவன் இனமக்கள் இவ்வாடையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

## கச்சை

ஆண்கள் சுண்ணாம்பு நீத்தும் தொழில் செய்யும் போது கச்சை ஆடையினைப் பயன்படுத்துகின்றனர்.

## வேட்டி

இது பாரம்பரிய ஆடையாகும். இடுப்பில் கட்டிக்கொள்ளும் ஆடை. இது பெரும்பாலும் வெள்ளை நிறத்தில் உள்ளது.

## ஆண்களின் திருமண ஆடை

பழங்காலத்தில் ஆண்கள் திருமணத்தின் போது கதர் வேட்டி, சட்டை அணிந்தனர். தற்காலத்தில் பட்டு வேட்டி, பட்டு சட்டை அணிகின்றனர்.

## அங்கவஸ்திரம்

அங்கவஸ்திரம் என்பது ஆண்கள் தோளில் போட்டுக் கொள்ளும் ஒருவகை ஆடை. இது திருமணத்தின் போது மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

## துண்டு

இது பிற இடங்களுக்குச் செல்லும் போது தோளில் போட்டுக் கொள்வர். சிலர் வேலை செய்யும் போது இடுப்பைச் சுற்றி கட்டிக்கொள்ளவர்.

## முண்டாசு

முண்டாசு என்பது தலையில் கட்டும் தலைப்பாகை ஆகும். இது ஒரு நீண்ட துணியைத் தலையைச் சுற்றி கட்டிக் கொள்வதாகும். இதை வெளியே செல்லும்போதும், சுண்ணாம்பு நீத்தும் போதும் பயன்படுத்துகின்றனர்.

## பெண்கள் பயன்படுத்திய ஆடை

புடவை, கூறைப்புடவை, பட்டுப்புடவை, பட்டுப் பாவாடை, சட்டை, தாவணி போன்ற ஆடையினைப் பெண்கள் பயன்படுத்தினர்.

## புடவை

முற்காலத்தில் பெண்கள் புடவையைப் பயன்படுத்தினர். புடவையை வீட்டில் இருக்கும் போதும் வெளியில் செல்லும் போதும் பயன்படுத்தினர்.

"பாத்தில் புடவை யுடையின்னா வாங்கின்னா

காப்பாற்றா வேந்த னுலகு" (இ. நா. 2)

என்று இன்னா நாற்பது பகுப்பில்லாத உடையுடுத்தல் துன்பத்தைத் தரும் என்று குறிப்பிடுகின்றது. புடைவை என்ற சொல் மக்களின் பேச்சு நடையில் புடவை என்றாகிவிட்டது.

## கூறைப்புடவை

கூறுப்படுத்துதல் காரணமாகப் பெற்ற பெயர் கூறை ஆகும். மலையாளத்தில் உடையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் கூறைச்சேலை, கூறைப்புடவை என்று அழைக்கப்படுகிறது. கூறைப்புடவை மணமகள் தாலிகட்டும் சடங்கில் உடுத்தும் உடையாகும். தற்காலத்தில் இதன் பயன்பாடு குறைந்து வருகிறது.

## பட்டுப்புடவை

பெண்கள் திருமணத்தின் போது பட்டுப்புடவையைப் பயன்படுத்துகின்றனர். உடைக்குரிய இழைகள் அனைத்திலும் உறுதியும் பளபளப்பும் மிகவுடையது பட்டு. இருவிதப் பட்டுப்புழுக்களினின்றும் உருவாக்கப்படும் பட்டு இழைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தன் மதிப்பில் உயர்ந்து வருகிறது. இது தற்காலத்தில் மக்களிடம் அதிகமாக பயன்பாட்டில் உள்ளது.

பாசியினுடைய வேரைப் போல அழுக்கடைந்து குறைவு பெற்ற தையலை உடையுடைய பாணினியின் உடைகளைக் களையச் செய்து தூய கெட்டிக்கரை போட்ட பட்டாடைகளைக் கரிகால் பெருவளத்தான் பாணினியை உடுத்திக் கொள்ளச் செய்ததை,

"பாசிவேரின் மாசொடு குறைந்த

துன்னறசிதா அர் நீக்கித் தூய

கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" (பொருநர்:153-155)

பொருநராற்றுப்படை விளக்குகிறது.

## பட்டுப் பாவாடை

இது முற்காலத்தில் அதிகமாக பயன்பாட்டில் இருந்தது. இது நீண்ட அமைப்பு உடையது. மேல்சட்டையுடன் அணியப்படுகிறது.

## தாவணி

தாவணி என்பது இளம் பெண்கள் அணியும் மேல் ஆடை. பூப்படைந்தப் பெண்கள் இதனைப் பயன்படுத்துகின்றனர். பாவாடை, மேல்சட்டை ஆகிய ஆடைகளுக்கு மேலாக இவ்வாடை அணியப்படுகிறது. இது பெண் பிள்ளைகள் பூப்படைந்த பிறகு உடுத்துகின்ற உடை. பழங்காலத்தில் பூப்படைந்ததற்கு அடையாளமாக இவ்வாடை அணியப்பட்டது. இதன் பயன்பாடு தற்காலத்தில் குறைந்து வருகிறது.

## அணிகலன்கள்

அணிகலன்கள் என்பது அழகுக்காக மனிதன் தனது பல்வேறு உறுப்புகளில் அணிந்து கொள்வதாகும். அணி என்றால் அழகு. இலக்கியத்திற்கு அழகு சேர்ப்பது மட்டுமின்றி மேனிக்கு அழகு சேர்ப்பதும் அணிகலனாகும். ஆதிகால மனிதன் அவனிடத்தில் கிடைக்கப்பெற்ற இலை தழைகளையும், பூக்களையும், விலங்கின் எலும்புகளையும் தனக்கு ஏற்ப அணிகலன்களாக மாற்றிக் கொண்டான். இதன் தொடர்ச்சி பிற்கால அணிகலன்களின் வளர்ச்சியாகி காலத்திற்கேற்றார் போல பல்வேறு வடிவமும், புதிய உருபடிவமும் பெற்று வருகின்றது. அணிகலன் என்பதற்கு "ஆபரணம், நகை, தடையம், பணி, அலங்காரம் என்று பலபெயர்கள்" 4 உள்ளன. அணிகலன்கள் உடலுக்கு அழகு சேர்த்து மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழரின் பண்பாடுகளில் அணிகலன்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. அணிகலன்களைக் கூந்தல், நெற்றி, காது, கழுத்து, தோள், முதுகு, கை, இடை, தொடை, கால் என மேனியில் அணிவித்து அலங்கரித்துக் கொள்கின்றனர்.

சங்ககாலத்திலிருந்து இன்று வரை ஆண், பெண் இருவரில் அணிகலன்கள் மீது அதிகம் விருப்பம் கொண்டு அவற்றைப் பெரும்பாலும் அணிவது பெண்கள்தான். பெண்கள் ஆடைகளினால் முழுவதும் மறைக்கப் பொறாத தம் உடலை அணிகலன் பூண்டு மறைத்தனர்.

## ஆண்களின் அணிகலன்கள்

சுண்ணப்பரவன் இனமக்களில் ஆண்கள் அரைஞாண், கடுக்கண், கங்கணம், செயின், காப்பு, மோதிரம் முதலானவற்றைப் பயன்படுத்தினர்.

## அரைஞாண்

அரைஞாண் என்பது அரையில் (இடையில்) அணியும் பொன்னலான கொடியாகும். இந்தப் பொற்கொடியினை அணியும் வழக்கம் தற்காலத்திலும் காணப்படுகிறது. வெள்ளி மற்றும் கருப்பு கயிற்றினாலும் அரைஞாண் அணிகின்றனர்.

## மோதிரம்

கைவிரல்களில் நடுவிரல் நீங்கலாக ஏனைய நான்கு விரல்களிலும் பொன்னால் அல்லது வெள்ளி, செம்பினால் செய்த மோதிரங்களை அணிவர்.

## கடுக்கண்

இது காதில் அணியும் ஒரு பொன் அணியாகும். இது வட்டமாகவோ அல்லது நீண்டு வளைந்தோ இருக்கும். இதன் இடையில் கற்கள் பதிக்கப்பெற்றிருக்கும்.

## கங்கணம்

கங்கணம் என்பது மங்கல நாண் ஆகும். இது திருமணத்தின் போது கட்டப்படுகிறது. இது மஞ்சள் நூலில் மஞ்சள் கிழங்கு வைத்துக் கட்டுவதாகும். இதனைத் தாய்மாமன் மணமகளின் இடது கையில் கட்டுவர்.

## குழந்தைகளின் அணிகலன்கள்

கம்மல், கொடி, தண்டை, கொலுசு, மோதிரம் போன்றவை சுண்ணப்பரவன் இனமக்கள் குழந்தைகளுக்கு அணியும் அணிகலனாகும்.

## தண்டை

தண்டை என்பது சிறு குழந்தைகளின் காலில் அணியும் அணிகலனாகும். இது ஒன்றுக்கொன்று தொட்டாற் போல முனைகளைக் கொண்ட உருட்டுக் கம்பி அல்லது குழல் வடிவிலான வெள்ளி அணிகலனாகும்.

## அரைமுடி

அரைமுடி என்பது பெண் குழந்தைகளின் இடுப்பில் அணியக்கூடிய அணிகலனாகும். இது சங்கிலியில் அல்லது கொடியுடன் சேர்ந்து அணியப்படுகிறது. இது அரசிலை வடிவிலான வெள்ளியினால் செய்யப்பட்ட தகடாகும்.

## தொடி (வளையல்)

தொடி என்பதற்கு வளையல் என்று பொருள். குழந்தைகளுக்குக் கண் திருஷ்டிப்படக்கூடாது என்பதற்காகக் கருப்பு வளையல் அணிவிக்கின்றனர். அத்துடன் பொன்னால் செய்யப்பட்ட வளையல் அணியும் வழக்கம் முற்காலத்திலும் தற்காலத்திலும் இருந்து வருகிறது.

## கம்மல்

இது காதில் அணியப்படும் அணிகலனாகும். சிறு குண்டோ மணியோ தொங்கும்படி அமைந்த பொன்னாலான அணிகலனாகும்.

## பெண்களின் அணிகலன்கள்

கன்னரசம், சுடிகை, குஞ்சம், சடைநாகர், சொருகுப்பூ, மகரக் குண்டலம், கொப்பு, பாம்படம், குணுக்கு, குதம்பை, தொங்கட்டான், ஜிமிக்கி, மூக்குத்தி, அட்டிகை, சங்கிலி, தாலி, மங்கல அணிகலன், காப்பு, குருடு சரி, சங்கு வளையல், செம்பு மோதிரம், கொடி, காற்கொலுசு, மெட்டி முதலானவை பெண்கள் அணியும் அணிகலனாகும்.

## கன்னசரம் (வகுப்புச்சரம்)

இது தலையணிகலனாகும். இது நெற்றிச் சுட்டி வகையைச் சார்ந்தது. இதற்குச் சுடிகை என்ற பெயரும் உண்டு. இது நெற்றிக்கு மேல் அரை வட்டமாகத் தலை மீது அணிவதற்காகப் பொன்னால் செய்யப்பட்ட அணியாகும். சங்கிலித் தொடர் போன்று காணப்படும். தலைநடுவில் உச்சியிலிருந்து நெற்றி வரை ஒரு பொன் சங்கிலிப் பட்டை இணைக்கப்பட்டிருக்கும். இவ்வணியின் நடுவில் நெற்றியின் மையத்தில் மூக்கிற்கு நேராக மேலே ஒரு பதக்கம் தொங்கும். இது பல வடிவங்களைக் கொண்டது.

## குஞ்சம்

இது சடையின் நுனியில் கட்டப்படும் அணியாகும். இது பந்துகள் போல் செய்யப் பெற்று அடியில் குஞ்சம் தொங்கும் மேலே பொன் போன்ற பூண் பொதியப் பெற்றிருக்கும்.

## சடைநாகர்

இது தலையில் உச்சியில் இருந்து கூந்தல் வரை அணியப்படும் அணிகலனாகும். இது மேல் பகுதியில் வட்ட வடிவில் கீழ் செல்ல செல்ல நீண்டு மெல்லியதாகக் காணப்படும். தற்காலத்தில் ஜடை மட்டை, பூஜடை என்று அழைக்கப்படுகிறது.

## சொருகுப்பூ

சொருகுப்பூ பொன்னால் செய்யப் பெற்ற அழகிய பூ வேலைப்பாடுகள் உடையது. தலையில் பின்னலின் நடுவில் வைக்கப்படும் அணிகலனாகும். தலையில் சொருகும் பூ வடிவமான அணியாதலால் சொருகுப்பூ எனப்பட்டது.

## மகரக்குண்டலம்

மகரக் குண்டலம் மகர மீன் வடிவத்தில் செய்யப்பட்ட குண்டலம். இது விழித்த கண்களையுடைய மீன் போன்றிருக்கும்.

## குருடு

காதின் அடிப்புறம் அதாவது கன்னத்தை ஒட்டி சிறிது நீண்டு இருக்கும் சதைப் பகுதியில் அணியப்படும் ஒரு பொன் அணி குருடு எனப்படும்.

## கொப்பு

இது காதின் மேற்பகுதியில் துளையிட்டு அணியப்படும் அணிகலன். இவ்வணி நடுவே தண்டும் மேலேயும் கீழேயும் இரு மணிகள் பொருந்தப் பெற்றிருக்கும்.

## பாம்படம்

காதில் பெருந்துளை வடித்த பெண்கள் தண்டட்டி, முடிச்சு என்னும் அணிகளோடு சேர்த்து அணியும் ஒரு பொன் அணியாகும். இவ்வணிகலனின் பயன்பாடு தற்காலத்தில் குறைந்து வருகிறது.

## குணுக்கு

இது காதில் கீழ்ப்பகுதியில் அணியப்படும். வளையம் போன்ற அணிகலனாகும். இதனை முற்காலத்துப் பெண்கள் அதிகளவில் பயன்படுத்தினர். தற்போது இதன் பயன்பாடு குறைந்து வருகிறது.

## குதம்பை

குதம்பை என்பது பெண்களின் காதில் தங்கத்தால் அணியும் அணிகலன் ஆகும். இதன் பயன்பாடு தற்காலத்தில் குறைந்து வருகிறது.

## தொங்கட்டான்

காதில் தோட்டோடு சேர்த்துத் தொங்கவிடும் அணிவகையாகும். இதற்கு லோலக்கு, டோலக்கு என்றும் பெயர் உண்டு. தற்காலத்தில் பயன்பாட்டில் உள்ளது.

## ஜிமிக்கி

இது தொங்கட்டானில் ஒரு வகையாகும். கீழ் அமைப்பு ஒரு குடை போல் இருக்கும். அந்தக் குடை வெறும் தங்கத்தாலோ அல்லது பல கற்கள் பதித்ததாகவோ இருக்கும். இது தற்காலத்தில் பயன்பாட்டில் உள்ளது.

## மூக்குத்தி

தமிழ்நாட்டு மகளிர் முற்காலத்தில் இருந்தே மூக்கணிகலன்கள் அணியும் வழக்கம் உள்ளது. அவர்கள் மூக்கின் நடுத்தண்டில் துவாரமிட்டு அதில் அணியும் அணிகலனுக்கு மூக்குத்தி என்று பெயர். மூக்கின் இடதுப்பக்கம் துவாரமிட்டு அதில் ஒரு சிறு தங்கக்கம்பியும் ஒரு கல்பதித்த கம்பியும் அணிந்தனர்.

## அட்டிகை

கழுத்தை ஒட்டி அணியப்படும் ஒரு பொன் அணியாகும். தகடு வடிவிலும் சங்கிலி வடிவிலும் உண்டு. நடுவே பதக்கம் தொங்கும். இது அட்டியல் என்றும் அழைக்கப்படுகிறது.

## சங்கிலி

இரண்டு அல்லது மூன்று சங்கிலிகள் போன்ற அணிகலனாகும். இது பொன்னாலானது.

## தாலி

இது பூட்டவும் கழற்றவும் வல்லதால் இருபுறங்களிலும் துளையுடன் கூடிய சிறுகுண்டுகள் வைக்கப்பட்டிருக்கும். இவற்றைப் பிணைக்கக் கொக்குவாய் என்ற கொக்கி ஒன்றும் உண்டு.

## மங்கல அணிகலன்

மங்கல அணிகலன் என்பது திருமணத்தில் மணமகன் மணமகளுக்குக் கட்டும் தாலியைக் குறிக்கிறது. பண்டையக் காலத்தில் மஞ்சள் நூலில் கட்டப்பட்டது. இப்போது தங்கத்தினால் ஆன மங்கல அணி பயன்படுத்தப்படுகிறது. தாலி சதுர வடிவிலோ, வெற்றிலை வடிவிலோ, ஆல இலை வடிவிலோ நடுவே சிவன் பார்வதி திருவுருவம், தாமரை பூ வடிவம் பதிக்கப் பெற்றிருக்கும்.

## காப்பு

இது பொன்னாலான கையணியாகும். பொன் தகட்டை உள்கூட்டாகச் செய்து உள்ளே மெழுகடைந்து செய்யப்பட்டதாகும். இதனை நீண்ட காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

## குருடு சரி

குருடு சரி என்பது கண்ணாடி வளையலின் கீழ் சிறுவடங்கள் தொங்கும் வகையில் அமைந்தது.

## சங்கு வளையல்

சங்கினால் செய்யப்படுவது சங்கு வளையல் எனப்படும். வலம்புரிச் சங்கினால் செய்த வளையல் வலம்புரி வளையல் என அழைக்கப்பெறும். இது இன்றும் வழக்கில் உள்ளது.

## செம்பு மோதிரம்

விரல்களில் செம்பு மோதிரம் அணிவது உடலில் நச்சுப்பொருள்களின் அளவு அதிகரிப்பதைக் குறைக்கும். மேலும் இது நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது.

## சங்கு மோதிரம்

சங்கு மோதிரத்தை அணிவதன் மூலம் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் என்று நம்பப்படுகிறது.

## கடிசூத்திரம்

கடிசூத்திரம் என்பது ஒட்டியாணம் போன்ற இடையணி ஆகும். இது பொன் பட்டையின் முன்புறம் சிறுசிறு சதங்கைகள் தொங்கும் அமைப்புடையது. இதனைப் பட்டிகை என்றும் கூறுவர்.

## கொடி

பொன் இழைகளில் பின்னப்பட்டு சிறிய கம்பி வடிவமாக செய்த ஒரு இடையணியாகும்.

## காற்கொலுசு

ஒரே விதமான வெள்ளியால் செய்யப்பட்ட அணிகலனாகும். இக்கொலுசின் கீழ்ப்பக்கம் சதங்கைகள் தொங்கும்.

## மெட்டி

இது முற்காலத்தில் இருந்தே வழக்கில் இருந்து வருகிறது. வெள்ளியாலும் பின்னர் கலப்பு உலோகத்தாலும் செய்யப்பட்டது. உறுதியான கம்பியை வளைத்து உருவாக்கப்பட்டது. இது இன்றும் வழக்கில் உள்ளது. திருமணத்தின் போது மணமகன் மணமகளின் கால்விரலில் மெட்டி அணிவிப்பது ஒரு சடங்காக நடைபெறுகிறது.

## முடிவுரை

மேற்கூறிய கருத்துகளிலிருந்து சுண்ணப் பரவன் இனமக்கள் வாழ்க்கைக்கு தேவையான ஆடை, அணிகலன்கள் அணிந்ததை இக்கட்டுரை விளக்குகிறது.

## References

இராகன், அ (2005) தமிழ்நாட்டு அணிகலன்கள், அமிழ்தம் பதிப்பகம், சென்னை.

தண்டபாணி, து (2010), இன்னா நாற்பது இனியவை நாற்பது, உமா பதிப்பகம், சென்னை.

பகவதி, கு (2003) தமிழர் ஆடைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பெருமாள், அ.கா (2004) நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி, அ.கா. தமிழினி பதிப்பகம், சென்னை.

பெர்லின், சி (2024) கடலோரச் சொல்லகராதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License